2003 ஏப்ரல் 23]

295—

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்

***7447—திரு. செ. அண்ணாதுரை:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில் இயங்கிவரும் பல்வேறு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நவீன வங்கிக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டம் தொகுதியில் சொந்தக் கட்டடம் இல்லாத தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நவீனக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதியில் இருக்கின்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் இப்போது வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளாக மாற்றப்பட்டிருந்தும் வங்கிகளாக மாற்றப்படும்போது அதற்குப் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால், அதற்கான கட்டட வசதியைச் செய்து தரும் வகையிலே, வருகின்ற நிதியாண்டிலாவது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் அந்த வங்கிகளுக்கு நவீன வசதிகளுடன் கூடிய கட்டடம் கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதியில் 21 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் இயங்கி வருகின்றன. அவற்றிலே 18 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் சொந்தக் கட்டடங்களிலே இயங்கி வருகின்றன. மீதம் இருக்கின்ற 3 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு

[2003 ஏப்ரல் 23

வங்கிகள் வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வருகின்றன. அந்தக் கட்டடங்களைக் கட்டுவதற்கு அந்த வங்கிகளிலே நிதிவசதி இல்லை என்கிற காரணத்தினாலும், நவீன வசதியுடன் கூடிய வங்கிக் கட்டடம் கட்டுவதற்கு கட்டுமானச் செலவினை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் வங்கிகளின் நிதிநிலைமை இல்லை என்கிற காரணத்தினாலும், ஜெயங்கொண்டம் தொகுதியில் செயல்படும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நவீன வங்கிக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை என்பதைப் பணிந்து தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

பதினாறாவது பட்டியல்

வாக்குச்சாவடி அமைத்தல்

1—

வினா எண் 15150—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் பெரும்பாலான இடங்களில் 5 கி.மீ. முதல் 6 கி.மீ. வரை நடந்து சென்று வாக்களிக்கும் நிலையுள்ளதால், வாக்குச் சாவடிகளைப் பிரித்து அருகிலிருக்கும் பள்ளிகளிலேயே வாக்குச் சாவடிகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:

01-01-2003 ஆம் நாளை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல்களின் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு இறுதி வாக்காளர் பட்டியல்கள் 17-01-2003 அன்று வெளியிடப்பட்டுள்ளன. எனினும், வாக்குச் சாவடிகளை சீரமைப்பது குறித்து இந்தியத் தேர்தல் ஆணையம் ஆணை எதுவும் வழங்கவில்லை. எனவே தேர்தல் ஆணையத்தின் அறிவுரை பெறப்பட்டவுடன் இதுகுறித்து மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.